## IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 77/2019 | Village | : | |
| Prosecution Witness | : | PW- 5 | Taluk | : | |
| Name | : | மகாலெட்சுமி | Age | : | 34 |
| Father Name | : | ஜெயகாந்தன் | Occupation | : | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.10.2024***

**1 முதல் 10 *எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் கீழவாசல் சாலைக்கார தெரு பழையமாரியம்மன்கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஜெயகாந்தன் எனது கணவர். 18.01.2018ம்தேதி எனது கணவர் என்னுடன் வீட்டில் தான் இரவு 8.30மணிவரை இருந்தார். 8.30மணியளவில் வெளியேசென்று வருவதாக சொல்லிவிட்டு சென்றார். என் வீட்டின் முன்பகுதியில் மாமனார் மற்றும் மாமியார் வசித்து வருகிறார்கள். நாங்கள் பின்பகுதியில் குடியிருக்கிறோம். எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் இருக்கும் சொந்தக்காரர் ராஜேந்திரன் மற்றும் சிலர் கத்திக்கொண்டே மாமா உன் மகனுடன் ஆதிமாரியம்மன்கோவில் அருகே உள்ள பாரில் நிறைபேர் சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சீக்கிரம் போய் பாருங்கள் என்று சொன்னார். யாராவது வாங்கடா என்று அழுது புலம்பி கூப்பிட்டபோது மோகன், முருகன், கணேசன், இளஞ்செழியன் ஆகியோர் எனது மாமனாரை வண்டியில் கூட்டிக்கிட்டு போய்விட்டார்கள். பின்னால் நானும் எனது மாமியாரும் பதறியடித்துக்கொண்டு ஓடினோம். அங்கு போய் பார்க்கும் போது எனது கணவரின் இடது பக்க தலையில் அரிவாளாலும் வாளாலும் வெட்டி சிதைந்து கிடந்தார். வலதுபக்க மோதிர விரல் கீழே வெட்டப்பட்டு துண்டாக கிடந்தது. நடுவிரல், ஆள்காட்டிவிரல் வெட்டுப்பட்டு துண்டாக தொங்கிக்கொண்டிருந்தது. யார் இப்படி செய்தார்கள் என்று கேட்டபோது எனது மாமனார் கலிவரதன், சுரேஷ், தினேஷ், அஜித், பாலமுருகன் ஆகியோர் அரிவாள், மற்றும் வாளால் வெட்டி இப்படிசெய்துவிட்டார்கள் என்று சொன்னார். நீங்கள் சென்று காப்பாற்றவில்லையா என்று நான் கேட்டதற்கு அவர்கள் ஆயுதம் வைத்திருந்ததாகவும் பக்கத்தில் யாரும் வரவிடவில்லை என்றும் என் மாமனார் சொன்னார். பிறகு 108 மூலம் மெடிக்கலுக்கு அழைத்துச்சென்றார்கள். பிறகு நானும் எனது மாமியாரும் வீட்டிற்கு வந்துவிட்டோம். எனது மாமனார் தாலுக்கா காவல நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றுவிட்டார். ஆஜர் எதிரி கலிவரதன் என்பவர் நீதிமன்றத்தில் வலமிருந்து இரண்டாவது உள்ளார். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். ஆனால் பெயர் குறிப்பிட்டு ஞாபகம்

இல்லை. சாட்சி ஆஜர் எதிரிகளை அடையாளம் காண்பிக்கவில்லை. மறுநாள் போலிசார் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள்.

**<u>1,3,4 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

ஆஜர் எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு எனக்கு தெரியாது. நானும் எனது மாமனாரும் ஒரே வீட்டில் தனித்தனி பகுதியில் இருக்கிறோம். போலிசார் என்னை விசாரிக்கும் போது எனது மாமனார் வீட்டுக்கும் பக்கத்து வீட்டில் இருக்கிறோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் பக்கத்தில் இருப்பதாக தான் சொன்னேன். 8.30மணிவரையிலும் எனது கணவர் வீட்டில் இருந்தார் என்றும் 8.30மணிக்கு வெளியே போய்விட்டு வருவதாக சொல்லிவிட்டு சென்றார் என்பதை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. ராஜேந்திரன் எனது மாமனாரிடம் சொல்லும் போது நான் எனது மாமனார் பக்கத்தில் இருந்தேனா அல்லது எங்கள் பகுதியில் இருந்தேனா என்றால் எங்கள் பகுதியில் இருந்தேன். எனது மாமனார் சத்தம் போட்டு சென்றபிறகு தான் நான் வெளியே வந்தேனா என்றால் இல்லை அவர் வந்து அழைக்கும் போதே என் காதில் கேட்டதால் நான் வெளியே வந்துவிட்டேன். ராஜேந்திரன் மற்றும் தெருக்காரர்கள் வந்தார்கள். மற்றவர்கள் பெயர் தெரியாது. ராஜேந்திரன் மற்றும் மற்றவர்கள் வந்து எனது மாமனாரிடம் உன் பையனை வெட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்களா என்றால் சண்டை போட்டுக்கொண்டிருப்பதாக தான் சொன்னார். சாட்சி மறுபடியும் ஞாபகம் இல்லை என்று சொல்கிறார். நான் போய் என் கணவரை பார்க்கும் போது அங்கு போலிசார் இருந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. போலிசார் விசரணையில் என் மாமனார் என்னிடம் இன்னார் வெட்டினார் என்று பெயரை குறிப்பிட்டு சொன்னதாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் என் மாமனாரிடம் நீங்கள் போய் தடுத்தீர்களா என்று கேட்க அவர் எதிரிகள் ஆயுதம் வைத்திருந்தார்கள் அதனால் பக்கத்தில் செல்லமுடியவில்லை என்று சொன்னதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என் கணவர் அடிப்பட்டு கீழே கிடந்ததை பார்த்தவுடன் நானோ, எனது மாமியாரோ, மாமனாரோ அவரை தூக்கி பார்த்தோமா என்றால் அவர் இரத்த வெள்ளத்தில் கிடந்ததால் எங்களை அங்கு இருந்தவர்கள் தூக்கிபார்க்கவிடவில்லை. ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் இல்லை. எங்கள் வீட்டிற்கும் ஒயின்ஷாப் பாருக்கும் 300 மீ தூரம் இருக்கும். போலிசார் விசாரணையில் சம்பவத்தை கேள்விப்பட்டு எனது மாமனார், தெருவில் உள்ளவர்கள் சம்பவ இடத்திற்கு ஓடினார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை வண்டியில் போனதாக தான் சொன்னேன். எனது கணவர் காயம்பட்ட இடத்திற்கு நான், எனது மாமியார், எனது மாமனார் ஒன்றாக சென்றோமா என்றால் இல்லை எனது மாமனார் முன்பு சென்றுவிட்டார். பின்னர் நானும் மாமியாரும் சென்றோம். எனது மாமனாரை அழைத்துச்சென்றவர்களின் வீடு எங்கள் வீட்டில் இருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் எங்கள் வீட்டின் எதிர்பக்கத்தில் தான் அவர்கள் வீடுகள் உள்ளன. என் மாமனாருடன் நான் சொன்ன சாட்சிகளை தவிர தெருக்காரர்கள் யாரும் செல்லவில்லை என்றால் சரிதான். என்னை வீட்டிற்கு அழைத்துவர்கள் யார் என்றால் நான் மயங்கிவிட்டேன். யார்

அழைத்துவந்தார்கள் என்று தெரியாது. எனது கணவர் பெயரில் நிறைய கொலை வழக்குகள் உள்ளது என்றால் இல்லை. காயம்பட்டதற்கு 4 நாட்களுக்கு முன்புகூட ஜெயிலுக்கு போய்விட்டு வந்தாரா என்றால் இல்லை. ஜெயிலுக்கு செல்லவில்லை போலிசார் விசாரணைக்கு தான் சென்றார். சம்பவத்திற்கு மறுநாள் போலிசார் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்கள். எனது கணவர் ரவுடி பட்டியலில் உள்ளார் என்றால் இல்லை. எனது கணவருக்கு எதிரிகள் அதிகம் என்றும் யார் அவரை வெட்டி காயப்படுத்தினார்கள் என்று தெரியாது என்றும் சந்தேகத்தின்பெயரில் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் என் கணவர் பொங்கலுக்கு 4 நாட்களுக்கு முன்பு தான் ஜெயிலுக்கு சென்றுவிட்டு வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை ஜனவரி 4ம் தேதி கிழக்கு காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்துச்சென்று 2 நாட்கள் கழித்து பிணையில் விட்டார்கள். போலிசார் விசாரணையில் சம்பவத்தன்று என் கணவரின் நிலையை பார்த்த மயங்கிவிட்டேன் என்பதை சொன்னேனா என்றால் என்ன நடந்ததோ அனைத்தையும் சொன்னேன். போலிசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் கணவர் காயம்பட்ட இடத்திற்கு செல்லவில்லை என்றும் என் மாமனாரும் என் மாமியாரும் செல்லவிலலை என்றும் பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றும் சொன்னால் ச ரியல்ல. எனது மாமனார் மேற்கண்ட எதிரிகளின் பெயர்களை சொன்னதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் அடையாளம் காட்டும் ஆஜர் எதிரி கலிவரதனை போலிசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அசா1 கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரை அடையாளம் காண்பித்தேன் என்றால் சரியல்ல.

**<u>1, 3, 4 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை மற்ற அனைத்து எதிரிகளும் ஏற்றுக்கொள்கிறார்கள்.</u>**

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 77/2019 | Village | : | |
| Prosecution Witness | : | PW- 6 | Taluk | : | |
| Name | : | ஜெயந்தி | Age | : | 58 |
| Father Name | : | சின்னராஜ் | Occupation | : | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.10.2024***

**1 முதல் 10 *எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் கீழவாசல் பழைய மாரியம்மன்கோவில் தெரு சாலைக்கார தெருவில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா1 சின்னராஜ் எனது கணவர். அசா5 மகாலெட்சுமி எனது மருமகள். இறந்துபோன அப்பு (எ) ஜெயகாந்தன் எனது மகன். 18.1.2018ம் தேதி 9.45மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது ராஜேந்திரன் என்பவர் உங்க பையனுடன் ஆதிமாரியம்மன்கோவில் டாஸ்மாக்கில் கரம்பைக்காரன்கள் சண்டை போட்டுக்கொண்டிருப்பதாக சொன்னார். அந்த கரம்பைக்காரர்கள் கலிவரதன், அஜித், பாலமுருகன், ஆட்டோராமு, சுரேஷ், அஜித் ( இந்த வழக்கில் 2 அஜித்கள் உள்ளார்கள்), கரிகாலன், கோபிநாத், ஆகியோர் ஆவர். நீதிமன்றத்தில் முதலில் நிற்பவர் கோபிநாத், 2வது கலிவரதன், 3வது சுரேரஷ், 4வது பையனை பார்த்ததில்லை, 5வது பாலமுருகன், 6வது அஜித், 7வது கரிகாலன், 8வது கோபிநாத், ஆகியோர் ஆவர். மேற்சொன்ன எதிரிகள் என் மகனை வெட்டிக்கொன்றுவிட்டார்கள். நானும் எனது மருமகளும் பின்னாடியே நடந்து ஓடினோம். என் கணவரும் மற்றவர்களும் வண்டியில் வேகமாக போய்விட்டார்கள். நாங்கள் போய் பார்க்கும் போது என் மகன் வெட்டுப்பட்டு கீழே விழுந்திருந்தார். தலையில் சுமார் 20 வெட்டுக்காயங்கள் இருந்தது. விரல் வெட்டப்பட்டு இருந்தது. யார் இப்படி செய்தது என்று எனது கணவரிடம் கேட்டபோது ஆஜர் எதிரிகள் 9பேரும் வெட்டியதாகவும் என் கணவர் முன்பு சென்றால் அவரையும் வெட்டிவிடுவதாக மிரட்டியதாக சொன்னார். அதற்குபிறகு அன்று இரவு என் கணவர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்க சென்றுவிட்டார். மறுநாள் காலை போலிசார் எங்களை வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். இரவு 11 மணிக்கு மேல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று என் மகனை பார்த்தேன். மருத்துவமனையில் எங்கள் உறவினர்கள் இருந்தார்கள்.

**1, 3, 4 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

நானும் எனது மகனும் ஒரே வீட்டில் தனித்தனியாக வசிக்கிறோம். போலிசார் என்னை விசாரித்தபோது என் மகன் அவரது மனைவி, குழந்தைகளுடன் என் வீட்டுக்கு பக்கத்தில் வேறு வீட்டில் வசிக்கிறான்

என்று சொல்லியுள்ளேன். எனது கணவரிடம் ராஜேந்திரன் வந்து சொல்லும் போது நான் என் வீட்டுக்குள் தான் இருந்தேன். என் கணவர் சத்தம் போட்டபிறகு தான் நான் வீட்டில் இருந்து வெளியே வந்தேன். என் கணவர் டாஸ்மாக் கடையில் என் மகனை வெட்டிக்கொண்டிருப்பதாக சொன்னாரா என்றால் இல்லை வந்து சொன்னவர் சண்டை போட்டு வெட்டிக்கொண்டிருப்பதாக சொன்னார். என் கணவருர் வண்டியில் சென்றார். நான், எனது மருமகள் நடந்து ஓடினோம். போலிசார் விசாரணையில் என் கணவரும் மற்றவர்களும் பாருக்கு வேகமாக ஓடிச்சென்றார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் கவணர் சென்று 1/4மணி நேரம் கழித்து நாங்கள் பாருக்கு சென்றோம். நாங்கள் போகும் போது பாரில் என் மகன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான் தெருக்காரர்கள் 50பேர் இருந்தார்கள். போலிசார் அப்போது அங்கு இருந்தார்களா என்றால் இல்லை அதற்குபிறகு தான் வந்தார்கள். போலிசார் இருந்ததை நான் பார்த்தேன். போலிசார் தான் ஆம்புலன்சுக்கு போன்செய்து காயம்பட்ட என் மகனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னை விசாரித்ததாக சொல்லும் பெண்காவலர் சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் இல்லை மறுநாள் வீட்டிற்கு வந்து தான் விசாரித்தார். என்னை ஒயின்ஷாப்பில் இருந்து வீட்டிற்கு யார் அழைத்துவந்தார்கள் என்றால் நான் மயங்கிவிட்டதால் யார் அழைத்து வந்தார்கள் என்று தெரியாது. போலிசார் விசாரணையில் என் மகனின் காயத்தை பார்த்ததும் மயங்கிவிட்டேன் என்று சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. என் மகன் காயம்பட்டதற்கு 2 நாளுக்கு முன்பு ஜெயிலுக்கு போய் பின்பு 2 நாள் கழித்து ஜாமீனில் வந்தார். என் மகன் பெயரில் நிறைய கொலை வழக்குகள், கொலை முயற்சி போன்ற நிறைய வழக்குகள் இருந்தது என்றால் ஒரு கொலை வழக்கு தான் இருந்தது. அதுவும் தள்ளுபடியாகிவிட்டது. என் மகன் ரவுடி பட்டியலில் இருக்கிறார் என்றால் தெரியாது. பலமுறை ஜெயிலுக்கு போய் ஜாமீனில் வந்தார் என்றால் 2 வழக்குகளுக்கு மட்டும் ஜெயிலுக்கு போனார். எனது மகனுக்கு நிறைய வழக்குகள் மற்றும் நிறைய எதிரிகள் உள்ளனர் என்றால் சரிதான். என் மகனை பல எதிரிகளில் யாரோ கொலை செய்துவிட்டார்கள் என்றும் சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரிகள் மீது பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் சென்றபோது ஆஜர் எதிரிகள் தான் என் மகனை வெட்டினார்கள் என்று சாட்சி தானாக முன்வந்து சொல்கிறார். ராஜேந்திரன் வந்து என் கணவரிடம் தகறாறு நடப்பதாக சொல்லவில்லை என்றும் என் கணவரும் நாங்களும் ஒயின்ஷாப்பிற்கு செல்லவில்லை என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் காயம்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு தான் நான், என் மருமகள், என் கணவர் ஆகியோர் மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம் என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 3, 4 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை மற்ற அனைத்து எதிரிகளும் ஏற்றுக்கொள்கிறார்கள்.</u>**

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.